பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை: 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

# நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 15] சென்னை: கார்த்திகை 21௳ (7—12—67) வியாழன் வெளியூர்: கார்த்திகை 22௳ (8—12—67) வெள்ளி [இதழ்: 146

## ஆதாரமற்ற கூற்று!

புதுடில்லி, டிச. 6—

"கடந்த பொதுத்தேர்தலில் விருதுநகரில் போட்டியிட்ட காமராசருக்கு எதிராகப் பிரசாரம் செய்தவர்களுக்கும்—வெளிநாட்டுத் தூதுவரகத்துக்குமிடையே தொடர்பு இருந்ததாகக் கூறப்படுவதை மெய்ப்பிக்க எந்தவித ஆதாரமும் இல்லை"

என்று உள்துறை அமைச்சர் சவாண், மக்களவையில் திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

# எதற்கும் டெல்லியின் தயவா?

## எவ்வளவு ஒட்டிச் சென்றாலும் வெட்டிவிடப் பார்க்கிறார்கள்!

### மத்திய அரசின் அதிகாரக் குவியல்— அண்ணா வேதனையும் யோசனையும்

விருதுநகர், டிச. 7—

"மாநிலங்களுக்கு விரிவான அதிகாரங்கள் கிடைக்கத் தக்கவகையில் உரிய மாறுதல்களைச்செய்ய அரசியல் சட்டத்தை ஒரு நிபுணர் குழுவின்மூலம் மறு ஆய்வு செய்யவேண்டும்."

"முன்பு நான் நாட்டுப் பிரிவினை கேட்டது உண்மை; ஆனால், இப்போது கேட்கவில்லை; 'ஒவ்வொரு காரியத்துக்கும் மாநில அரசு மத்திய அரசை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் அவலநிலை நீங்கவேண்டும்' என்கிறேன்; அதற்குத் தக்கவிதத்தில் மத்திய—மாநில அரசுகளிடையே அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டு, பரவலாக்கப்பட வேண்டும்"

என்று முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள், நேற்றிரவு இங்கு நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்கள்; அவர் மேலும் பேசுகையில் விளக்கியதாவது:—

### இந்த நிலைமை என்று மாறுவது?

"மாநில அரசு, ஒரு புதிய தொழிலைத் துவக்கவோ, இயந்திரங்களுக்கான இரும்பை வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யவோ முடியாது. எல்லா அதிகாரங்களும் டில்லியிலேயே குவித்து வைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொன்றுக்கும் மாநில அரசு மத்திய அரசின் அனுமதியைப் பெற்றாக வேண்டியிருக்கிறது.

"சேலத்திலே கிடைக்கும் இரும்பையும் — நெய்வேலியில் கிடைக்கும் பழுப்பு நிலக்கரியையும் கொண்டு உருக்குத் தொழிற்சாலை அமைக்க வேண்டுமானால், 'அதற்கு, டில்லியின் தயவு இருந்தால்தான் முடியும்' என்ற நிலைமை இருக்கிறது!

செவ்வாய்க்கிழமையன்று இரவு என்னைச் சந்தித்த ஜப்பானிய நிபுணர்கள், இதுபற்றி என்னிடம் விவாதித்தார்கள்.

சேலம் உருக்குத் தொழிற்சாலைக்கான 'இயந்திரச் சாதனங்களையும், இத்தொழிற்சாலையை அமைக்கச் செலவாகும் தொகையில் ஒரு பகுதியையும் கொடுத்துதவுவதாக அவர்கள் உறுதியளித்தனர்.

மேலும், உற்பத்தி துவங்கியதும், உற்பத்தியாகும் உருக்கையும் தாங்கள் வாங்கிக்கொள்வதாக ஒப்புக்கொண்டிருக்கின்றனர்.

ஆனால், இந்தப் பிரச்சினையில் மேற்கொண்டு நான் எதையும் செய்ய எனக்கு அதிகாரமில்லை!

### விரட்டியடிக்கும் நிலைமையே அது!

மத்திய அரசிடம் எதையும் அமைதியான முறையில் அணுகிப் பெறவே நான் விரும்புகிறேன்; ஆனால், மத்திய அரசின் கொள்கைகளோ, என்னை விரட்டியடிப்பனவாக இருக்கின்றன!

விவசாயிகளுக்குத் தண்ணீர்த் தீர்வையையும் மின்சாரக் கட்டணத்தையும் அதிகப்படுத்தும்படி மத்திய அரசு யோசனை கூறுகிறது; ஏற்கனவே பல தொல்லைகளை அனுபவித்துவரும் விவசாயிகளை, இது மேலும் தாக்குவதாக இருக்கும் என்பதால், இதனை வன்மையாக எதிர்க்கிறேன்!

### செயல்பட்டாலன்றி பயன் விளையாது!

பாதுகாப்புச் செலவைக் குறைப்பதன்மூலம் நூறு கோடி ரூபாயை மிச்சப்படுத்தமுடியும் என்று நான் கூறினேன்.

நிலுவையில் உள்ள வருமான வரியை வசூலிப்பதில் தீவிரம் காட்டினால் கோடிக்கணக்கான பணம் கிடைக்கும் என்று கூறினேன்.

பொதுத்துறை நிறுவனங்களில் சிக்கனமும், நிர்வாகத் திறமையும் கடைபிடிக்கப்பட்டால் அதன்மூலம் பல கோடி ரூபாய் கிடைக்கும்.

நான் கூறிய இந்த யோசனைகளை ஏற்று மத்திய அரசு செயல்பட்டாலொழிய, மாநிலங்கள் மேற்கொண்டு வரி விதிக்க இயலாது."

## காதில் விழுந்தது!

"சர்க்கரை விலை குறையும்—செகசிவன்ராம் நம்பிக்கை" என்ற செய்தியை, காங்கிரசுப் பத்திரிகை ஒன்று முக்கியத்துவம் கொடுத்துப் போடக் காரணம் என்ன?"

"அதுவா?—வேறு ஒன்றுமில்லை; 'சர்க்கரை விலை அதிகரிப்புக்கு மத்திய அரசுதான் காரணம்' என்று இங்கே உள்ள அரசு கூறியபோது, 'வீணான பழி' என்றதன் விளைவு! குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கிறது! அதனால்தான், மத்திய அமைச்சரின் பேச்சுக்கு இத்தனை வெளிச்சம்!

## சம்பாப் பயிர் பற்றிய சந்தேக நிலை மறைகிறது

### காவிரிப் பகுதியின் எட்டு இலட்சம் ஏக்கர்கள் ஆபத்தைக் கடக்கின்றன!

### 'பாசன நீர்' கேட்ட மக்கள் 'வடிகால்' தேடுகின்றனர்!

### அழிவைத் தரும் பூச்சிகளும் அழிந்தொழிகின்றன!

காலமறிந்து பெய்துவரும் கடந்த இரண்டு நாள் மழையின் காரணமாகத் தஞ்சை, மற்றும் பல மாவட்டங்களில் இருந்த சம்பாப் பயிர் பற்றிய அச்ச நிலை மறைந்திருக்கிறது!

குறிப்பாக, தஞ்சை மாவட்டத்தில் காவிரிப் பாசன வசதி பெறும் எட்டு இலட்சம் ஏக்கர் சம்பாப் பயிர் நிலங்கள், நீர்த் தட்டுப்பாடு பற்றிய அபாயக் கட்டத்தைக் கடந்திருக்கின்றன!

மழைத் தட்டுப்பாட்டுடன், 'பூச்சிகள் படையெடுப்பினாலும் பயிர் முற்றிலும் அழிந்துவிடும்' என்றிருந்த கவலை, பெய்துள்ள மழையினால் மறைந்திருக்கிறது!

தண்ணீர்ப் பஞ்சத்தைப் போக்கியிருக்கும் பெருமழை, பூச்சிகள் பரவலையும் ஒடுக்கியிருக்கிறது!

மேலும் தொடர்ந்து பெய்துகொண்டிருக்கும் மழையின் காரணமாக, 'பாசனத்துக்கு நீர் கிடைக்குமா' என்று கேட்டுக் கொண்டிருந்த உழவர்கள், 'அதிகரித்துக் கிடக்கும் நீரை வடிப்பது எங்கே' என்று தேடும் நிலை தோன்றியுள்ளது.

இதனால், மேட்டூர் அணையிலிருந்து பாசன வசதியைத் தரும் வாய்க்கால்களில், நீர்ப் போக்குவரத்து அடைக்கப்பட்டிருக்கிறது!

தமிழகத்தின் தென் பகுதிகள், தொடர்ந்து மழையைப் பெற்று வருகின்றன!

## இந்திபேசாத மக்களின் உணர்ச்சியை மதித்துச் செயல்படுக!

### டில்லிக்கு அறிஞர் அண்ணா முன்னெச்சரிக்கை

விருதுநகர், டிச. 7—

"மொழிச் சிக்கலில் மத்திய அரசு துணிவுடன் செயல்பட வேண்டிய கட்டம் வந்துவிட்டது! துரதிருஷ்டவசமாக இந்தி வெறியர்கள் வற்புறுத்தலுக்கு மத்திய அரசு பணிந்துவிடுமேயானால், அதன் விளைவாகத் தமிழகத்திலும், இந்தி பேசாத ஏனைய பகுதிகளிலும் என்ன நடக்கும் என்பதை என்னால் சொல்ல இயலாது!

"நிலைமை கட்டுக்கடங்காத அளவுக்குப் போய்விடக்கூடும்! அப்படி ஆகிவிட்டால் பிறகு அவற்றிற்கெல்லாம் நான் பொறுப்பாளியாக முடியாது!

"அச்சுறுத்துவதற்காக நான் இப்படிச் சொல்லவில்லை! இந்த உயிர்ப் பிரச்சினையில் மக்களின் உணர்ச்சி எந்த அளவுக்கு இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டவே இதனைக் கூறுகிறேன்!

"எனவே, மத்திய அரசு சற்றுப் பரந்த உள்ளத்தோடு செயலாற்றி, நாட்டின் ஒற்றுமையை வலுப்படுத்த வேண்டும்."

—விருதுநகர் பொதுக்கூட்டத்தில்

## புயல் நிலைமை!

சென்னை, டிச. 7—

சென்னையில் நேற்றிலிருந்தே குளிர்க் காற்றும் தூற்றலுமாக இருந்துவருகிறது.

இன்று காலையிலிருந்து காற்று சற்றுக் கடுமையாக இருந்து வருகிறது; கடல் கொந்தளித்துக் காணப்படுகிறது.

"வங்காள விரிகுடாவில் உருவான புயல், இன்னும் 12-மணி நேரத்தில் பாம்பனைக் கடக்கும்" என வானிலை ஆராய்ச்சி நிலையம் இன்று காலை அறிவித்தது.

## 'மாதிரி இருட்டடிப்பு'!

'சில்குரி' என்னும் வங்காளத்தின் வடக்குப் பகுதியில் உள்ள எல்லையோர சிறிய நகரில், 'மாதிரி இருட்டடிப்பு' ஒத்திகைகள் நடைபெற்று வருகின்றன!

இருட்காலங்களில், அபாய அறிவிப்பு தரப்படும்போது, மறைவிடங்களில் எப்படிப் பாதுகாப்புடன் ஒளிந்துகொள்ள வேண்டுமென்பதை, மக்களுக்குச் சொல்லித் தருகின்றனர், அதிகாரிகள்!

அந்நிய ஆக்கிரமிப்பு அச்சத்தினையொட்டி இதுபோன்ற பயிற்சிகள் அந்தப் பகுதியில் தொடர்ந்து கடைபிடிக்கப்பட்டுவருவதாகவும் கூறப்படுகிறது!

நம்நாடு

இரா. செழியன்

திருவள்ளுவராண்டு 1998 கார்த்திகை 21 (7—12—67) வியாழன்

# கண்ணல்ல! கைத்தடி தான்!

★

இந்தி பேசாத பகுதி மக்களுக்கு, முன்னாள் தலைமை அமைச்சர் நேரு கொடுத்திருந்த வாக்குறுதியை, 'சட்டமாக்குவது' என்ற பெயரால், ஆட்சிமொழித் திருத்த மசோதா ஒன்றை இந்திய அரசாங்கம் உருவாக்கி இருக்கிறது. அம்மசோதா இப்பொழுது நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டு வருகிறது.

'இந்தியுடன் ஆங்கிலமும் இணை ஆட்சி மொழியாக—இந்தி பேசாத பகுதி மக்கள் விரும்புகின்ற வரையில்—நீடித்து இருந்து வரும்' என்பது, மறைந்த தலைமை அமைச்சர் நேரு தந்த வாக்குறுதியாகும். அவ்வாக்குறுதியை முழு அளவில் நிறைவு செய்யக் கூடியதாக இத்திருத்த மசோதா இருந்திடவில்லை.

அந்த வாக்குறுதியை அப்படி நிறைவேற்றி வைக்க, அரசியல் சட்டத்தில் அதற்குரிய திருத்தத்தைச் செய்தாக வேண்டும். இப்பொழுது நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்படுகின்ற மசோதாவினால், அந்த வாக்குறுதியை நிறைவேற்றி வைத்துவிட முடியாது.

விவாதத்திலிருக்கின்ற ஆட்சிமொழித் திருத்த மசோதா குறித்துத் தமிழக முதலமைச்சர் அண்ணா அவர்கள், 'அரசியல் சட்டத்திலேயே அதற்கான திருத்தத்தைச் செய்தாக வேண்டும்; அது ஒன்றுதான் கழகத்துக்குத் திருப்தி அளித்திடும்' என, அழுத்தந்திருத்தமாகக் கருத்தறிவித்துள்ளார். இக்கருத்தை அறிவித்த அதே நேரத்தில், இந்திய அரசாங்கத்தால் உருவாக்கப்பட்டிருக்கின்ற ஆட்சிமொழித் திருத்த மசோதாவை, சில திருத்தங்களுடன் வரவேற்றும் உள்ளார்.

ஆட்சிமொழித் திருத்த மசோதாவில் செய்யப்பட வேண்டிய திருத்தங்களைச் செய்திட, நாடாளுமன்றத்திலுள்ள கழக உறுப்பினர்கள் தீவிரமாக முயற்சி செய்வர். அம்முயற்சிக்குக் குறிப்பிடத்தக்க ஆதரவும் கிடைத்திடக் கூடும்.

திருத்த மசோதாவில் அண்ணா அவர்கள் கோடிட்டுக் காட்டியிருக்கின்ற திருத்தங்களை நாடாளுமன்றத்தில் வலியுறுத்தக் கழக உறுப்பினர்கள் ஆயத்தமாக உள்ள இந்த நிலையில், குறிப்பிட்ட மசோதாவை—மசோதா நிலையிலேயே—கழுத்தை நெறித்துக் கொன்றுவிட, இந்தி ஆதரவாளர்களான நாடாளுமன்ற உறுப்பினர்கள் முனைந்துள்ளனர். இவ்வுறுப்பினர்களில், காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்தவர்களில் சிலரும் உள்ளனர். மசோதாவுக்கு எதிராக வாக்களிப்பதற்குத் தங்களுக்கு உரிமை அளிக்குமாறும் அந்த உறுப்பினர்கள் கோருகின்றனர்.

கழகத்தின் சார்பில், தமிழக முதலமைச்சர் அண்ணா அவர்கள் விரும்புகின்றபடியும், சிறந்த முறையில் நேருவின் வாக்குறுதியை நிறைவேற்றிவைக்கவும் அரசியல் சட்டத்தில் திருத்தம் செய்யவேண்டுமானால், அதற்குத் தேவைப்படக்கூடிய பெரும்பான்மை இருந்தாக வேண்டும். அப்பொழுதுதான் அரசியல் சட்டத்தில் ஆட்சிமொழி பற்றிய விதியை நுழைத்திட முடியும்.

ஆனால், இன்று இந்திய ஆட்சிப்பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கின்ற காங்கிரசுக் கட்சி, ஏற்கனவே இருந்த எண்ணிக்கை பலம் கொண்டதாக இல்லை; எதிர்க் கட்சிகள் அனைத்தும் கொண்டிருக்கின்ற உறுப்பினர்களைவிட, ஏறத்தாழ ஐம்பது உறுப்பினர்களை மட்டுமே அதிகமாகக்கொண்ட கட்சியாகக் காங்கிரசுக் கட்சி இருந்துவருகிறது.

இந்த எண்ணிக்கை குறைவாக இருந்திட்டாலும் கூடுதலாக இருந்திட்டாலும், காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்த அனைவரும், ஆங்கிலம் ஆட்சிமொழியாக நீடித்து இருந்துவருவதை ஏற்றுக் கொள்ளுகின்றவர்களாக இல்லை; இவர்களில் பலர், ஆங்கில மொழி எதிர்ப்பில் முன்னணியில் உள்ளனர்.

இவர்களைப் போன்றே, 'எதிர்க் கட்சி' என்ற பெயரில் உள்ள உறுப்பினர்களில் பலர், ஆங்கில மொழியைத் தீவிரமாக எதிர்த்து வருகின்றவராவர். இவர்கள் கருத்தைக்கொண்ட காங்கிரசுக் கட்சியினரும் இவர்களுடன் சேர்ந்துகொண்டு, மசோதாவுக்கு எதிராக வாக்களிப்பதற்குத் துணியும்பட்சத்தில், மசோதா தோல்வியடைந்துவிடும்.

இப்படி இம்மசோதா, சட்டமாக நிறைவேற்றப்படாமல் நாடாளுமன்றத்தில் தோற்றுவிடுமானால், ஏற்கனவே சட்டமாக நிறைவேற்றப்பட்டிருக்கின்ற ஆட்சிமொழிச் சட்டப்படி, ஆங்கிலம் ஆட்சிமொழியாகத் தொடர்ந்து இருந்துவருவதற்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுவிடும். பழைய மொழிச் சட்டத்தில், ஆங்கிலத்தின் 'தலைவிதி' அப்படித்தான் வரையறை செய்யப்பட்டிருக்கிறது. முன்னர் இயற்றப்பட்ட சட்டத்தின் மூலம், ஆங்கிலத்திற்கு, 'ஆட்சி மொழி' என்ற நிலையில் ஏற்படக்கூடிய அழிவைத் தடுத்து நிறுத்தி, ஆங்கிலம் எப்பொழுதும் ஆட்சிமொழியாக நீடித்து இருந்துவரச் செய்யப்படும் ஏற்பாடுதான் இத்திருத்த மசோதா.

எனவே, 'இந்தியுடன் ஆங்கிலமும் ஆட்சிமொழியாக நீடித்து இருந்துவரவேண்டும்' என்பதற்கு—'அரசியல் சட்டத்தில் அதற்கான ஏற்பாட்டினைச் செய்திட வேண்டும்' எனக் கோரி வரும் கழகம், இத்திருத்த மசோதாவை இப்பொழுது ஆதரிக்க விரும்புவதற்கு, இதுதான் காரணம். குருடன் பார்வையைத்தான் கோருவான்; பார்வைக்குப் பதிலாகக் கைத்தடிதான் கிடைக்கிறது என்றால், அக்கைத்தடியை, புத்திசாலிக் குருடன் ஏற்றுக்கொள்ளத்தான் செய்வான்.

ஆனால், அத்துடன் புத்திசாலிக் குருடன் நிறைவு பெற்றுவிடமாட்டான்; மீண்டும் மீண்டும் கண்களைப் பெற மென்மேலும் முயற்சித்துக் கொண்டுதான் இருப்பான்; இதுதான் அறிவுடைமை; அரசியலிலும் இந்த அறிவுடைமை இன்றியமையாததாகும்.

—கா. க.

# 16,30,500 டன் குண்டுகள்

## வியட்நாம் போரில் வீசப்பட்டதாம்!

கடந்த இரண்டாவது உலகப் போரில் ஐரோப்பா முழுவதும் வீசப்பட்ட குண்டுகளைக் காட்டிலும் அதிக அளவு 'குண்டுகளை வியட்நாம்மீது அமெரிக்கா வீசியிருப்பதாகத் தெரிகிறது.

1965-ம் ஆண்டு ஜூலைத் திங்களிலிருந்து இதுவரையில் அமெரிக்கக் கப்பற்படை, விமானப் படை ஆகிய இரண்டும் 16,30,500 டன் எடையுள்ள குண்டுகளை வட—தென் வியட்நாம் போர்களில் பயன்படுத்தியிருக்கின்றன! கொரியா போரில் வீசப்பட்ட 6 35,000 டன் எடையுள்ள குண்டுகளைக் காட்டிலும் இது இரண்டு மடங்காகும்!

இப்போரில் அமெரிக்க ஐக்கிய நாடுகள் 1,801 போர் விமானங்களை இழந்திருக்கின்றன; அதாவது, 900 டன் எடையுள்ள குண்டுகள் வீசப்பட்ட ஒரு விமானத்திற்குச் சமமாகும்.

இதில். 973 போர் விமானங்கள் எதிரிகளால் நாசப்படுத்தப்பட்டன. எஞ்சியுள்ள 828 போர் விமானங்கள் பல்வேறு விபத்துக்களில் நாசமாகியிருக்கின்றன.

வட—தென் வியட்நாமில் வாழும் ஒருவன்மீது 100 பவுண்டு எடையுள்ள குண்டுகள் வீசப்பட்டிருப்பதாகத் தெரிகிறது! ஒவ்வொரு சதுர மைலுக்கும் சுமார் 12 டன் எடையுள்ள குண்டுகள் வீசப்பட்டிருக்கின்றன!

# இவர்களா மக்கள் நலனில் நாட்டமுள்ளவர்கள்?

## தமிழ்நாட்டுக் காங்கிரசார் பற்றி அண்ணா

"படி அரிசித் திட்டத்தை, ரூ. 8 கோடி நட்டத்தையும் ஏற்றுக் கொண்டு தமிழக அரசு நிறைவேற்றிவருவதை அறிவீர்கள்; இந்த நட்டத்தைச் சரிக்கட்ட மொரார்ஜி தேசாயிடம் பணம் கேட்கச் சென்றபோது, இங்குள்ள 'பெருந்தன்மை' மிக்க காங்கிரசுக்காரர்கள், மத்திய அரசாங்கத்தை நோக்கி, 'கொடுக்காதே' என்று குரலெழுப்பியதோடு, 'ஏன் போட்டாய் ரூபாய்க்குப் படி அரிசி? யாரைக் கேட்டுப் போட்டாய்?' என்று நம்மைக் கேட்டுக் கண்டித்தார்கள்! இங்கிருந்து கொண்டே கலகத்தை மூட்டினார்கள்!

"இவர்கள், 'கொடு' என்று சொன்னால் மொரார்ஜி தேசாய் கொடுத்துவிடுவாரா என்பது வேறு விவகாரம்; அவரும் உண்மையை உணராமல், 'முடியாது' என்று சொல்லிவிட்டார்; உடனே, 'ரூபாய்க்குப் படி அரிசி இல்லை' என்று நாம் கைவிட்டுவிடவில்லை; இன்னும் கொடுத்துவருகிறோம்!

"காங்கிரசுக்காரர்களுக்கு, 'கட்சியைவிட நாட்டு மக்களின் நன்மையே பெரிது' என்ற நாட்டமிருக்குமானால், மத்திய அரசிடம் உதவி கேட்ட என்னை, 'ஏன் கேட்கிறாய்' என்று கேட்டிருக்கமாட்டார்கள்!

"மொரார்ஜியிடம் உதவிப் பணம் கேட்டதற்குக் காரணம், வீதிக்கு வீதி தி. மு. கழகக் கொடியைக் கட்டுவதற்கோ, கழகத் தோழர்களுக்குப் பணத்தைப் பங்கிட்டுக் கொடுக்கவோ அல்ல! தமிழ் நாடு காங்கிரசுக் கட்சி கட்டியிருப்பதுபோல் பெரிய கட்டிடத்தைக் கட்டிவிட்டு, 'மாத வாடகை எவ்வளவு வருகிறது' என்று கணக்கு விவகாரத்தைப் பார்த்துக்கொண்டிருப்பதற்கு அல்ல!

"'நட்டத்தைச் சரிக்கட்ட வரி போடு' என்கிறார்கள்—இங்குள்ள பெரிய காங்கிரசுக்காரர்கள்!

"எங்கிருந்து வரி போடுவது? தாங்க வேண்டாமா மக்கள்? தொழிலில் முடக்கப்பட்டு—வருவாய் குறைந்துவிட்ட இந்த இக்கட்டான நிலையில் மேலும் வரி போட்டால், மக்களால் எப்படித் தாங்க முடியும்? 'வரி போடவேண்டும்' என்று எதிர்க் கட்சியாக இருக்கும்போதே சொல்கிறவர்கள், ஆட்சிக்கே வந்திருந்தால் என்னென்ன செய்திருப்பார்கள்?"

(சென்னை—வண்ணைக் கூட்டத்தில்)

# கேலிச் சித்திரத்தில் பத்தாண்டுச் சாதனை

## சிரித்துச் சிந்திக்க வைக்கும் இலட்சுமணனின் கைத்திறமை!

100 ஆண்டுகளாக வெளிவந்து கொண்டிருக்கும் பம்பாய் ஆங்கில நாளிதழான 'டைம்ஸ் ஆப் இந்தியா'வைப் படிப்பவர்கள், இதழை வாங்கியவுடன் பார்க்கும் பகுதி 'யு செட் இட்' (You Said It), அந்தப் பகுதிக்குப் பின்னால் இருக்கும் ஓவியரின் பெயர் தான் இலட்சுமண்!

பிரபல பிரிட்டிஷ் கேலிச் சித்திரக்காரரான 'லோ' போன்றவர்கள் வரிசையில் வரும் ஆர். கே. இலட்சுமண், 'டைம்ஸ் ஆப் இந்தியா'வில் எழுதும் அரசியல் கார்ட்டூன்களைவிட 'யு செட் இட்' என்னும் பகுதிதான் மிகவும் பாராட்டுதலைப் பெற்றதாகும்.

பத்தாண்டுகளுக்குமுன் டிசம்பர் மாதத்தில் துவக்கப்பட்ட இப்பகுதியில், இலட்சுமண் இதுவரை 2,600 'பாக்கெட் கார்ட்டூன்'கள் வரைந்திருக்கிறார்!

அரசியல் கேலிப் படங்களில் இலட்சுமண், நேருவின் உருவத்தை எழுதுவதில் தனிச் சாதனையைப் பின்பற்றிய பெருமைக்குரியவராவார்!

வழக்கமாக நேருவின் தலையில் காணப்படும் காந்திக் குல்லாய் இல்லாமல்தான் இலட்சுமண், நேருவின் உருவத்தை வரைவார்!

"காந்திக் குல்லாய் இல்லாமல் நேருவின் உருவத்தை வரைவது தான் எனக்குப் பிடித்தமானதாகும்" என அவரே ஒரு முறை கூறியிருக்கிறார்.

அதேபோல், 'டைம்ஸ் ஆப் இந்தியா'வின் ஒற்றைப் பத்தியில் வரும் 'யு செட இட்' என்னும் 'பாக்கெட் கார்ட்டூ'னிலும், தவறாது ஒரு உருவம் இருந்து கொண்டே வரும்.

'ஸ்ரீமான் பொதுஜனம்' என்று சில கட்டுரையாசிரியர்கள் குறிப்பிடுவதுபோல் அந்த உருவம் ஏதாவது ஒரு படத்தில் வரத் தவறிவிட்டாலும், உடன் உலக நாடுகள் சிலவற்றிலிருந்துகூட கவலை தெரிவித்து—காரணம் கேட்டுக் கடிதங்கள் வருகின்றனவாம்!

இத்துணைக்கும், அந்த உருவம் பேசுவதாகச் சித்திரத்தில் வந்ததே கிடையாது!

மற்ற பாத்திரங்கள் பேசுவதை அந்த உருவம் உற்றுக் கவனிக்கும் கோணல்களே பத்திரிகையைப் படிப்பவருக்குச் சிரிப்பையும், சிந்தனையையும் தருவதாக இருக்கும்!

எத்தனைச் சிறியதாக அந்த உருவம் வரையப்பட்டிருந்தாலும், அதற்கு இருக்கும் முக்கியத்துவம்மட்டும் குறைந்திருக்காது! ஓரிரு சம்பவங்களில் அந்த உருவம் தனது மனைவியுடன் தோன்றும்; ஆனால் அது மிகவும் அபூர்வம்!

'யு செட் இட்' பகுதியின் தரத்துக்கு, அண்மையில் பல 'மாநிலக் கவிழ்ப்பு'கள் நடந்த போது வெளிவந்த ஒரு கேலிப் படம் தகுந்த சான்றாகும்.

செயலாளர் ஒருவர்—மேசைக்குக் கீழே ஒளிந்துகொண்டிருப்பதாக நாமே மனக்கண்ணால் நினைத்துக்கொள்ள வேண்டிய முதலமைச்சரிடம் — பின்வருமாறு கூறுவார்:—

"ஆமாம் சார்; நன்றாக விசாரித்துவிட்டேன்; வந்திருப்பவர் ரோட்டரி கிளப் கவர்னராம் — மாநிலக் கவர்னரன்று!"

இதைக் கேட்டபடி தூர நின்று ஆச்சரியம் தொனிக்க நின்று கொண்டிருப்பார்—வழக்கமாக அந்தப் படத்தில் வரும் பொதுஜனம்!

அரசியல் மட்டுமல்ல—தக்காளி விலை ஏற்றத்திலிருந்து அணு குண்டு சோதனைவரையில்—ஐந்தாண்டுத் திட்டத்திலிருந்து சந்திர மண்டலப் பயணம்வரையில்—எந்தத்தலைப்பிலும், கேலியைக் கருப் பொருளாக வைத்துச் சிந்திக்கத்தக்க சித்திரங்கள் வரையும் இலட்சுமணனின் திறமை, அவருக்கு நண்பர்களையும் திரட்டிக் கொடுத்திருக்கிறது! விரோதிகளையும் சம்பாதித்துத் தந்திருக்கிறது!

அவரது சித்திரங்களினால் துணுக்குற்ற பலர், கோபமும் கொண்டிருக்கிறார்களாம்!

பலதரப்பட்ட மனித உணர்வுகளைக் கோடுகளின் வளைவுகளில் தேக்கிக் காட்டி, சிரிப்பையும் சிந்தனையையும் தரும் அவரது இத்தகைய ஒரு பகுதிக் 'கார்ட்டூன்'கள் மட்டும், இதுவரையில் இரண்டு புத்தகங்களாக வந்துள்ளன!

இந்தியப் பத்திரிகை உலகத்துக்கு இது போன்ற ஒரு சேர்க்கை, இன்றியமையாத தேவையே!

—எஸ். ஆர்.

# கருத்தடை பிரச்சாரம்!

## அண்ணா வற்புறுத்தல்

"நம்முடைய நாடு பொருளாதாரத்தில் எவ்வளவு பின்தங்கி—ஏழ்மையான நாடாகப் போய்க் கொண்டிருக்கிறது என்பதைப் பார்க்கும்போது, இதற்கு, 'மக்கள் தொகைப் பெருக்கம்தான் காரணம்' என்பது புலப்படும்!

"நமது நாட்டில் குழந்தை பிறப்பு அதிகரித்துக்கொண்டே போனால், கடைசியில் நாட்டின் நிலைமை என்ன ஆகும் என்பதை எண்ணிப்பார்க்கவே அச்சமாக இருக்கிறது!

"எனவே, குழந்தை பிறப்பைக் குறைப்பதற்குக் கருத்தடை செய்வதுதான் ஒரே வழி!

"கருத் தடைக்கு அரசு ஆதரவு தெரிவித்து, மாட்டு வண்டியின் மூலமும், சுவரொட்டிகள் மூலமும் பிரச்சாரம் செய்துவருகிறது.

"அரிமா சங்கங்களும் கருத்தடைப் பிரச்சாரத்தில் ஈடுபட்டால் வேண்டிய உதவிகளை அரசு செய்யும்."

(மீனம்பாக்கம் அரிமா சங்க மருத்துவமனைத் திறப்பு விழாவில்)

# டில்லிக்குச் சென்ற 'தேசீய'மணிகள்!

''நல்லது செய்யாவிட்டாலும் கெடுதலாவது செய்யாமல் இரு'' என்பது பழமொழி.

''நாங்கள் என்ன செய்தாலும் அது நல்லதுதான்'' என்று கூறி, கெடுதலையே செய்துகொண்டிருப்பது தமிழ் நாட்டுக் காங்கிரசுக்காரர்களுக்கு வாடிக்கையாகிவிட்டது!

'மக்களுக்கு நல்லதா—கெட்டதா' என்பதைப் பற்றி அவர்கள் கவலைப்படுவதில்லை! தங்களுக்கு நல்லதா—தங்கள் கட்சிக்கு நல்லதா—என்று பார்ப்பதுதான் அவர்களுடைய நோக்கம்!

குறிப்பாகவும் சிறப்பாகவும், கழகம் சொல்வதற்கு நேர் மாருகச் சொல்வதுதான் அவர்களுடைய முழு முதல் இலட்சியம்!

'காகம் கருப்பு' என்று கழகம் சொன்னல், 'இல்லை, இல்லை; வெளுப்பு' என்று சொல்பவர்தான் உண்மையான காங்கிரசுக்காரர்—தேச பக்தர்! 'ஆமாம்; கருப்புதான்' என்ருல் அவர், கடைந்தெடுத்த 'தேசத் துரோகி'யாவார்—இன்றைய காங்கிரசாரின் இலக்கணப்படி!

இந்தி பேசாத மக்களுக்கு இந்தித் திணிப்பால் ஏற்படக் கூடிய பேராபத்தை எடுத்துக் கூறி—நேருவின் உறுதி மொழியை முழு அளவில் செயல்படுத்தச் செய்யும் வகையில்—அரசியல் சட்டத்தையே திருத்தி மொழிப் பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வு காணுமாறு வற்புறுத்துவதற்காகத் தமிழக மாணவர் குழுவினர், புதுடில்லிக்குப் புறப்பட்டனர்!

இந்த மாணவர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தினலோ வேறு எந்த அரசியல் கட்சியினலோ அனுப்பப் பட்டவர்களல்லர்; தமிழகத்தில் நிலவும் இந்தி எதிர்ப்பு உணர்ச்சிக்கு அடையாளமாக விளங்கும் மாணவர்களின் பிரதிநிதிகளாகவே அவர்கள் சென்றனர்.

அவர்கள் புறப்படுவதை அறிந்த காங்கிரசார், தாங்களும் சில மாணவர்களைப் பிடித்து—மாணவரல்லாத ஒருவரைத் தலைவராகக் கொண்டு—'மாணவர் குழு' என்ற பேரால் ஒரு சிலரை டில்லிக்கு அனுப்பிவைத்தனர்!

அவர்கள் புதுடில்லிக்குப் போனதும், காங்கிரசுத் தலைவர் காமராசரைக் கண்டு 'தரிசித்து'விட்டு—அவருடைய 'அறிவுரை'யையும் பெற்றுக்கொண்டு—தலைமையமைச்சர் இந்திராவைப் பார்த்திருக்கின்றனர்!

'கான மயிலாடக் கண்டிருந்த வான்கோழிபோல்' சென்ற இந்தத் தூதுக் குழுவினருக்குப் பெயர் என்ன தெரியுமா?—

## 'தேசீய'த் தமிழ் வளர்ச்சி மாணவர் குழு!

இந்தத் 'தேசீய'த்தின் பொருளைத்தான் தமிழ் மக்கள் நன்கு அறிவார்களே!

இந்திரா காந்தியைப் பார்த்து இவர்கள் என்ன சொன்ருர்கள் தெரியுமோ?—

**"நாங்கள் இந்தியை எதிர்க்கவில்லை; திணிப்பைத்தான் எதிர்க்கிறேம்!"**

**"ஆட்சிமொழித் திருத்த மசோதா எல்லாக் கண்ணேட்டத்திலும் திருப்திகரமாக அமைந்துள்ளது!"**

**"அரசியல் சட்டத்தைத் திருத்தத் தேவை இல்லை!"**

**"இப்பொழுது கொண்டுவரப்பட்டுள்ள மசோதாவே சம்பந்தப்பட்ட அனைவருக்கும் போதிய பாதுகாப்புக் கொடுக்கிறது!"**

போதுமா—தமிழகத் 'தேசீய'த் 'திலக'ங்கள் தமிழ் வளர்ச்சிக்குச் செய்த 'தேசீய'த் திருப்பணி?

'இவர்கள் செய்தது போதாது' என்று—இந்திராவைப் பார்க்கச் சென்ற தமிழக நாடாளுமன்றக் காங்கிரசு உறுப்பினர்கள் இருவரும்,

**"ஆட்சிமொழி மசோதா பற்றித் தாங்கள் முழுத் திருப்திப்படுவதாக"**

எடுத்துரைத்தனராம்!

எக்கட்சியையும் சேராத—தமிழகத்தின் எதிர்கால நலனை மட்டுமே கருத்தில் கொண்ட—எல்லோரும் மாணவர்களாகவே உள்ள தூதுக் குழுவினரும் தலைமையமைச்சர் இந்திரா காந்தியைச் சந்தித்து—தமிழக மக்களின் உள்ளக்கிடக்கையை வெளிப்படுத்தி—இந்தியினல் ஏற்படவிருக்கும் பேராபத்தைச் சுட்டிக்காட்டி இருக்கின்றனர்; 'இப்போது கொண்டுவரப்படும் ஆட்சிமொழித் திருத்த மசோதா இந்தி பேசாத மக்களுக்கு முழு மனநிறைவு அளிக்கவில்லை' என்பதையும், 'அரசியல் சட்டத் திருத்தமே தமிழக மக்களுக்குத் தக்க பாதுகாப்பு அளிக்கும்' என்பதையும் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கின்றனர்!

இந்திராவை மட்டுமல்ல—இந்தி வெறியர் தலைவரான சேத் கோவிந்த தாசையும் கண்டு, தங்களின் நியாயமான அச்சத்தையும், மொழிப் பிரச்சினைக்கு நிலையான தீர்வு காணத் தக்க வழி அரசியல் சட்டத் திருத்தமே என்பதையும் அமைதியாகவும், பண்போடும் எடுத்துச் சொல்லியிருக்கின்றனர்.

எத்துணை வெறியராக இருந்தபோதிலும், இந்த மாணவர்களை அன்புடன் வரவேற்று, அமைதியாக அவர்களின் கருத்துக்களைக் கேட்டறிந்ததுடன், தம்முடன் விருந்துண்ண வேண்டும் என்றும் விரும்பி அழைத்திருக்கிருர்—சேத் கோவிந்த தாஸ்! மாணவர்கள் அவரிடம் நடந்துகொண்ட விதத்தையும் வாயாரப் புகழ்ந்து பாராட்டியிருக்கிருர்! இதிலிருந்தே, இந்த மாணவர் குழுவினரிடம் எந்த அளவுக்கு நேர்மையும் உண்மையும் இருந்திருக்க வேண்டும் என்பதை அவரே புரிந்துகொண்டார் என்பது புலப்படும்.

இதேபோல், 'தேசீய'க் குழுவினரும், இந்தி வெறியர்களைச் சந்தித்துத் தமிழகத்தின் உண்மை நிலையை எடுத்துரைத்திருப்பார்களானல், அவர்களின் நோக்கத்தில் ஓரளவேனும் 'தூய்மை' இருக்கிறது என்று சொல்லலாம்.

தங்களின் 'தனிப்பெரும் தலைவர்' காமராசரையும், தங்கள் கட்சியைச் சேர்ந்த தலைமையமைச்சரையும் சந்தித்துவிட்டு, டில்லி நகரத்தைக் 'கோலி'விட்டு வருவதற்காகவா ஒரு (தேசீய)த் தூதுக் குழு செல்லவேண்டும்? அங்கு போய்ச் சொன்னதை, இங்கிருந்தே எழுதியனுப்பியிருக்கலாமே! என்ன அப்படிப் புதிதாகச் சொல்லிவிட்டார்கள்?

மாணவர்கள், 'அரசியலில் பங்கு கொள்ளலாமா கூடாதா?' என்பதற்குத் தமிழகத்தில் இன்னமும் விவாதம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது; ஆனல், மாணவர் அல்லாத ஒரு 'பச்சை'க் காங்கிரசுப் பேச்சாளரை மாணவர்களுக்குத் தலைமைதாங்கி அழைத்துச் செல்லுபவராகக் காங்கிரசு அறிமுகப்படுத்தியிருக்கிறது!

''மாணவர்கள் அரசியல்வாதிகளாகத் தங்களை ஆக்கிக் கொள்ளலாமா?''—இதற்கு விடை, அண்ணு அவர்களால் பல்வேறு நேரங்களில் தெளிவாகச் சொல்லப்பட்டுவிட்டது!

ஆனல் அரசியல்வாதிகள், மாணவர் வேடத்தில் புதுடில்லிவரை சென்று நஞ்சைப் பரப்புவதற்கு என்ன பொருள்?

நமக்குப் புரிகிறது! நாட்டு மக்கள் தெரிந்துகொள்ளட்டும்!

—மா. செ.

# வேலையில்லாதோர் தொகை!

புதுடில்லி, டிச. 6—இந்தியாவில் உள்ள வேலை தேடித் தரும் நிறுவனங்களில் பதிவு செய்துகொண்டவர்களில் 6 60,000 பேர்கள் கடந்த அக்டோபர் 31-ந் தேதி முடிய வேலையற்றவர்களாக இன்றும் இருக்கிருர்கள்.

இத்தகவலை நாடாளுமன்ற மேலவையில், தொழிலாளர் நல அமைச்சர் வெளியிட்டார்.

# சென்னை 94-வது வட்ட நாவலர் மன்றம்

சென்னை 94-வது வட்டம் சத்திய மூர்த்திநகர் நாவலர் மன்ற நிர்வாகிகள் தேர்தல் வட்டச் செயலாளர் ந. மு. வாமணன் முன்னிலையில் நடைபெற்றது; தேர்ந்தெடுக்கப்பட்டோர்:—

தலைவர்: கொ. ப. கோவிந்தசாமி; துணைத் தலைவர்: கோபால கிருட்டினன்; செயலாளர்: வேணு கோபால்; துணைச்செயலாளர்: வெங்கடாசலம்; பொருளாளர்: வேணு நாதம்; துணைப் பொருளாளர்: சுப்பிரமணியம்; 15 பேர் செயற்குழு உறுப்பினர்கள்.

# காணவில்லை

25—11—67 அன்று விருதுநகரில் எம். ஜி. ஆர். கலந்துகொண்ட சிறப்புக் கூட்டத்திற்குச் சென்ற ஊமை வாலிபரைக் காணவில்லை. வயது 35; நிறம் கருப்பு; பிறவி ஊமை; ஒரு கால் ஊனம்; தத்தித் தத்தி நடப்பார்; பெரிய கருப்புக் கோட்டு அணிந்திருப்பார்; எழுதப் படிக்கத் தெரியாது; கழக நடவடிக்கைகளில் உறுதுணையாக இருந்து வருபவராவார்.

அவரைக் காணும் தோழர்கள் கீழ்க்காணும் முகவரிக்கு உடன் தெரிவிக்குமாறு வேண்டப்படுகிருர்கள்:—

சிவ. சண்முகசுந்தரனர்,
முகவை மாவட்ட தி. மு. க.
அவைத் தலைவர்,
அருப்புக்கோட்டை.

# 'ஆட்சியைக் கவிழ்த்துவிடலாம்' எனக்: காங்கிரசார் 'கனவு'

## நிலைமைபுரியாமல் நடந்துகொள்ளும் பரிதாபம்!

'''தி. மு. க. ஆட்சி என்ன சாதித்துவிடப் போகிறது—எத்தனையோ ஆட்சிகள் கவிழ்ந்து போயிருக்கின்றன—இன்ருே நாளையோ கவிழ்ந்துவிடப் போகிறது' என்று, 'நாம் ஆளக் கூடாது' எனக் கருதுபவர்கள் பேசக்கூடும்!

''ஆட்சிக்கு வந்துவிட்டதால் புதிய மகிழ்ச்சியே வந்துவிட்டதாக என்னைப் போன்றவர்கள் கருதவில்லை: 'புதிய பொறுப்பு—புதிய பாரம் நம்மீது சுமத்தப்பட்டிருக்கிறது; மக்கள், தங்களின் குறைகள் தி. மு. கழகத்தினல் தீர்க்கப்படும் என்ற நம்பிக்கையில் பொறுப்பை ஒப்படைத்திருக்கிருர்கள்' என்று கருதுகிறேமே தவிர, 'அந்தஸ்து' உயர்ந்துவிட்டது என்று கருதவில்லை! அப்படிப்பட்ட தொடர்பை நாம் மக்களிடம் வைத்திருக்கவில்லை!

''காங்கிரசுக் கட்சிமீது—ஆட்சிமீது—மக்களுக்கு ஏற்பட்ட கொதிப்பைத்தான் நாட்டு மக்கள் தேர்தலில் வெளிப்படுத்தியுள்ளனர் என்பதனைக் காங்கிரசார் இனியேனும் புரிந்துகொள்வார்களானல், இருக்கின்ற பலகீனத்தையாவது போக்கிக்கொள்ள முடியும்!

'''பதவி கிடைக்குமா கிடைக்காதா' என்ற எண்ணமே தோன்ருத நாளிலிருந்து, உங்களுக்கும்—எனக்கும் பற்றும் பாசமும் இருந்துவந்துள்ளது! 'உங்களுக்காக நாங்கள் பணியாற்றுவோம்' என்ற நம்பிக்கை உங்களுக்கும், 'என்றைக்கும் நீங்கள் எங்களுக்குத் துணையாக இருந்து உற்சாகமூட்டுவீர்கள்' என்ற உணர்வு எங்களுக்கும் இருபதாண்டுக் காலமாகவே இருந்துவருகிறது!

''காங்கிரசுக்காரர்களுக்கு இந்தச் சூட்சுமம் புரியவில்லை; அதனல்தான், பழிச்சொற்களை அள்ளி வீசுவதன் மூலம்—இழிமொழிகளை எடுத்து வீசுவதன்மூலம், 'ஆட்சியைவிட்டு நம்மை இறக்கிவிடலாம்' என்று எண்ணுகிருர்கள்!

''எனக்குள்ள வருத்தமெல்லாம், 'இன்னும் காங்கிரசுக்காரர்கள் இந்த உண்மையைத் தெரிந்துகொள்ளவில்லையே' என்பதுதான்! பாவம்! அவர்கள் வேறு யாரைத் திட்டுவார்கள்? வெளிநாட்டுக்காரனைத் திட்டினல் சண்டைக்கே வந்துவிடுவான்! என்னைத் தாக்கினல் நான் தாங்கிக் கொள்வேன் என்று திட்டுகிருர்கள்! இந்த உண்மையை உணர்ந்து கொண்டதால்தான், நான் அதற்கெல்லாம் கவலைப்படுவதில்லை. மக்கள் மனம் எப்படியெல்லாம் மாறியிருக்கிறது என்பதனை அவர்கள் அறிந்துகொள்ளத் தவறிவிட்டார்கள்!''

—அறிஞர் அண்ணு
(வண்ணைப் பொதுக்கூட்டத்தில்)

# மக்களவை உறுப்பினர் மாத ஊதியம்—வசதி!

## 'இந்துஸ்தான் டைம்ஸ்' கருத்து வாக்கெடுப்பு

புதுடில்லி நாடாளுமன்ற :உறுப்பினர்களின் ஊதியம்—வசதி ஆகியன குறித்து 'இந்துஸ்தான் டைம்ஸ்' என்ற ஆங்கில நாளிதழ் பதின்மூன்று பேர்களிடம் ஒரு கருத்து வாக்குப் பதிவு நடத்தியது.

அவர்களில் நான்கு பேர் காங்கிரசு உறுப்பினர்கள்; சுதந்தராக் கட்சியைச் சேர்ந்தவர்கள் இரண்டு பேர்; ச.சோ., பி.சோ., கம்யூனிஸ்டு (இடது), ஆர்.எஸ்.பி. ஆகிய கட்சிகளிலிருந்து ஒவ்வொருவர்; ஒரு சுயேச்சை—இரண்டு ஜனசங்க உறுப்பினர்கள் ஆகியோரிடமிருந்து அந்த நாளிதழ் கருத்துக்களைப் பெற்றது.

**காங்கிரசு உறுப்பினர் தாரகேசுவரி சின்கா, பொதுவாக, 'உறுப்பினர்களின் ஊதியமும் வசதியும் அதிகரிக்கப்பட வேண்டும்' எனக் கூறியிருக்கிருர்; அதற்கு உதாரணமாகத் தன்னையே சுட்டிக் காட்டி, 'மாதமொன்றுக்கு ரூ. 2,000 செலவாகிறது' என்றும் தெரிவித்திருக்கிருர்!**

கம்யூனிஸ்டு உறுப்பினர், 'இப்போது பெறுவதே போதும்' எனக் கூறியிருக்கிருர்!

''உறுப்பினர்களுக்குத் தரப்படும் அலவன்சுத் தொகைகள் பிச்சைக்காரர்களுக்குப் போடப்படும் தர்மத்தைப் போல் குறைவு''

என்ற கருத்தினைத் தந்திருப்பவர், பிரபல சினிமா மாத இதழாசிரியர் பாபு ராவ் படேல்!

சுதந்தரா உறுப்பினர்கள் இருவரும், 'இன்னும் கூடுதல் தொகை தேவை' எனக் கூறினர்!

இதையொட்டி, அந்த ஏட்டில் வந்துள்ள மக்களவை உறுப்பினர்களின் ஊதியம்—வசதி ஆகியவை பற்றிய விவரங்களாவன:—

**மாதாந்திர ஊதியம்:**—ரூ. 500.

**அன்ருடப் படிச் செலவு:**—ரூ. 31; சபை கூடும் நாளுக்கு முன்னும், கூட்டத் தொடர் முடிந்த பின் மூன்று நாட்களுக்கும் இத்தொகை உண்டு.

**குடியிருப்பு வசதிகள்:**—ரூ. 350 வாடகை பெறுமான 'ஏ'—'பி' ரக வீடுகள் ரூ. 61-க்கும்; ரூ. 450 வாடகை பெறுமான 'சி' ரக வீடுகள் ரூ. 81-க்கும்; ரூ. 750 வாடகை பெறுமான 'இ'—'எப்' ரக வீடுகள் ரூ. 100-க்கும்; ரூ. 2,500 பெறுமான பங்களாக்கள் ரூ. 300-க்

(4-ம் பக்கம் பார்க்க)

# யார் வைத்த கொள்ளி?

1958-ம் ஆண்டின்போது மக்களவையின் மைய மண்டபத்தில் ஒரு முறை 'தீ வைப்பு'!

நான்கு ஆண்டுகளுக்குமுன் மொழி மசோதாவுக்கு நேர்ந்த கதி, இப்போது அதன் திருத்த மசோதாவுக்கும் நடந்திருக்கிறது!

பொருத்தம் இத்துடன் நின்று விடவில்லை!

அப்போது சுவாமி இராமேஷ்வரானந்தா தீ வைத்தார்! இப்போது, உகும் சந்த் கச்வாயி, 'எரிப்பு' வேலை செய்திருக்கிறார்!

கட்சி—கொள்கை—நடைமுறை எல்லாவற்றையும் கடந்த வகையில், அங்கே இந்தி மொழி வெறியர்கள் ஒன்றுபட்டிருக்கிறார்கள்!

**'எரிக்க விரும்பினேன்; எரித்தேன்! என்னைப்போல் ஆசை படைத்தவர்கள் அங்கேயும் இருக்கிறார்கள்—என்று, நாடாளுமன்றத்தில், ஆளும் கட்சி வரிசையைச் சுட்டிக் காட்டியிருக்கிறார் கச்வாயி!**

**'அப்படி இங்கு யாரும் இல்லை' என உடன் மறுப்பு தெரிவிக்கப்பட்டிருப்பதாக எந்தப் பத்திரிகையிலும் செய்தியைக் காணோம்!**

ஏனெனில் அந்தக் கட்சியைச் சார்ந்த உறுப்பினர் ஒருவர், அதற்குச் சற்று நேரத்துக்கு முன்னர்தான், மக்களவை வரவேற்பு அறையில் உள்ள ஆங்கிலப் பெயர்ப் பலகையை அப்புறப்படுத்தி, நாசம் செய்துவிட்டு அமர்ந்திருக்கிறார்!

தனது கட்சி உறுப்பினர் செய்துவிட்ட—செய்யக்கூடாத காரியத்துக்கு மன்னிப்புக் கோரிய வாஜ்பாயியை நோக்கி, 'இவையெல்லாம் வெறும் நாடகம்' என்று குற்றஞ் சுமத்திய காங்கிரசு உறுப்பினர் நகாதா, பத்திரிகைகளும்கூடப் பெயரைக் குறிப்பிடாத—அவரது கட்சி உறுப்பினர் நடத்திய 'ஆங்கிலப் பெயர்ப் பலகை உடைப்பு'க்கு—என்ன பெயரிட்டு அழைப்பார் என்று தெரியவில்லை!

சனநாயகத்தைக் கட்டிக் காக்கவேண்டிய இடத்துக்கு, சாதாரண நெருப்புப் பெட்டி வந்திருக்கிறது!

உணர்ச்சியினால் உந்தப்பட்டாலும் அதைக் கட்டுப்படுத்தி—அமைதியான முறையில் நடந்துகொள்ளவேண்டிய உறுப்பினர்,

**"ஐயா! இதோ பாருங்கள்—ஆட்சிமொழித் திருத்த மசோதாவை எரிக்கிறேன்"**

என்று பார்க்காதவர்களையும் கூப்பிட்டுக் காண்பித்திருக்கிறார்!

நடக்கக்கூடாதது மட்டுமல்ல—இதுவரையில் நடைபெறுதது நடந்திருக்கிறது!

அதிர்ச்சியடைந்த—மக்களவையினைக் கட்டிக் காக்கும் பொறுப்பு கொண்ட—தலைவர் என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறார் என்பது, நடந்துவிட்ட நிகழ்ச்சியை இனி மறைக்கப்போவதில்லை!

**"மக்களாட்சி முறையை அமுல் நடத்த வேண்டிய இடத்தில், மனிதப் பண்புக்குப் பஞ்சமும், பண்பாட்டு நடவடிக்கைகளுக்கு ஆபத்தும் வந்துவிட்டனவே"என்று எண்ணி ஆராய்வது ஒருபுறமிருக்க, 'மொழித் துறையில் கணிசமான பகுதியினர் பாதிக்கப்படாமல் இருக்க வகை செய்யும் ஓரளவு மார்க்கமும், இந்தி வெறியர்களிடையே இத்தகைய விளைவுகளை ஏற்படுத்துகிறதே' என்பதுதான் முக்கியம்!**

ஒரே ஒரு உகும் சந்த் கச்வாயி வைத்த நெருப்பு அல்ல இது! அவருக்குப் பின்னால் இருக்கும் கட்சி மாறுபாடு கடந்த இலட்சக்கணக்கான இந்தி வெறியர்களை அவர் பிரதிபலிக்கிறார்!

அவர்கள் அனைவரும் வைத்த கொள்ளிதான் இது!

இந்த எரி நெருப்பு, ஓர் அறிவிப்புதான்!

இந்தி மொழி பேசாதோர் பெறுவதற்கு இருக்கும் அரைகுறை பாதுகாப்புக்கும் தீ வைக்கும் இந்த தீச் செயல்களின் போக்குதான், மத்திய அரசினரை, மொழி மசோதா திருத்தத்தில்—'மாற்றம்' என்ற பெயரில்—இந்திக்காரர்களின் கருத்துக் கேற்றவாறு 'கலப்படம்' செய்ய வைக்கப் போகிறது!

★ **சில ஆண்டுகளுக்குமுன் மொழித் துறையில் பாதுகாப்புத் தேடியவர்மீது இராணுவத்தை ஏவிவிட்டார்கள்—**

★ **எதிர்ப்பினைக் காட்டப் பொது இடத்தில் அரசியல் சட்டப் பிரதியை எரித்ததை, 'தத்துவப்படி தவறு' என்றவர்கள்—**

★ **மொழி ஆர்வம் காரணமாகத் தங்களை மட்டுமே தீயிட்டுக் கொண்டு வெந்து மடிந்தவர்களை, 'வயிற்றுவலிதான் அதற்குக் காரணம்' என்றவர்கள்—**

மக்களவையிலுள் நடந்திருக்கும் இந்த வெறி நாடகத்துக்கு என்ன விளக்கம் தரப் போகிறார்கள்?

— எஸ். ஆர்.

# திருச்சி வீட்டமைப்புப் பிரிவு

(மாநில வீட்டு வசதிக் கழகத்தைச் சார்ந்தது)

## ஒப்பந்தப் புள்ளி அறிவிப்பு

எண் 14/67–68

இரண்டு அடுக்கு பிளாக்குகள் (1-ல் 4) கட்டுவதற்கு வேலையின் பெயரும், ஒப்பந்ததாரரின் பெயரும் உறையின் மேலே குறிப்பிடப்பட்டு, முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் தனித்தனியே, ஒவ்வொரு வேலைக்கும் குறிப்பிடப்பட்டுள்ள தேதியில் மாலை 3-மணிக்கு முன்னதாகக் கிடைக்கும்படியாக வரவேற்கப்படுகின்றன.

| திட்டத்தின் பெயர் | குழு எண் | ஒவ்வொரு குழுவின் வேலைக்கும் தோராய மதிப்பீடு | ஒவ்வொரு குழுவுக்கும் பொறுப்புத் தொகை | ஒப்பந்தப்புள்ளி அனுப்ப வேண்டிய கடைசி நாள் |
|---|---|---|---|---|
| I. துரைசாமிபுரம், திருச்சி | I முதல் IV வரை | ரூ. 34,000 | ரூ. 510 | 27—12—67 |
| II. செங்குளம் காலனி, திருச்சி | I & II | ரூ 36,000 | ரூ. 540 | 27—12—67 |
| III. காஜாமலை காலனி, திருச்சி | I முதல் V வரை | ரூ. 36,000 | ரூ. 540 | 28—12—67 |
| IV. சாலை ரோடு திட்டம், திருச்சி | I முதல் V வரை | ரூ. 36,000 | ரூ. 540 | 28—12—67 |
| V. நீலகிரி தெற்குத் தோட்டம், தஞ்சாவூர் | I முதல் XV வரை | ரூ. 36,000 | ரூ. 540 | 29—12—67 |

ஒப்பந்த சம்பந்தமான தஸ்தாவேஜுகளை டிவிஷனல் அக்கவுண்டெண்டிடம், 11—12—67 முதல் 26—12—67 வரை அலுவல் நாட்களில்—அலுவலக நேரத்தில் ஒவ்வொரு குழுவுக்குமான ஒவ்வொரு செட்டுக்கும் ரூ, 5-ம், விற்பனை வரியும் (திரும்பப் பெற முடியாதது) செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

ஒப்பந்தப் புள்ளிகள் பெறும் கடைசி நாள் பிற்பகல் 3-15 மணிக்கு, அவை திறந்து பார்க்கப்படும்.

சர்க்யூட் ஹவுஸ் ரோடு
திருச்சிராப்பள்ளி-1

ஆர். வெங்கடாச்சார்
நிர்வாகப் பொறியர் & நிர்வாக அதிகாரி

அமைச்சர்

## கே. ஏ. மதியழகனுக்கு வரவேற்பு

வெளிநாடு சென்று திரும்பிய உணவமைச்சர் திரு. கே. ஏ. மதியழகன் அவர்கட்கு வரவேற்பு; வட சென்னை நல உரிமைக் கழகத்தின் சார்பில் 8—12—67 மாலை 5-30 மணிக்கு சென்னை தண்டையார்பேட்டை பாலு முதலி தெரு, 1/11 எண்ணுள்ள இல்லத்தில்; தலைவர்: மேயர் டாக்டர் அபிபுல்லா பேக்; பேசுவோர்: அமைச்சர்கள் செ. மாதவன், மா. முத்துசாமி. (திரு. சி. கே. பால சுப்பிரமணியம் பொன்னாடை போர்த்துவர்).

## மக்களவை உறுப்பினர்...

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

கும் வாடகைக்குத் தரப்படுகின்றன. இவையன்றி, இலவச இருக்கைகளும் தரப்படுகின்றன.

**பயணச் செலவு** :—இந்தியா முழுவதிலும் இரயிலில் முதல் வகுப்பில் பயணம் செய்வதற்கு அனுமதி.

**விமான வசதி** :—சபை நடைபெறும் காலத்தில் மட்டும் போக—வர இரண்டு இலவச விமான டிக்கெட்டுகள்!

**தொலைபேசி**:—இலவசத் தொலைபேசி வசதியும், 3,600 தடவைகள் கட்டணமின்றிப் பேசிக் கொள்ளும் சலுகையும்!

**மற்ற வசதிகள்** :—அரசினர் வெளியீடுகள் அனைத்தும் இலவசம்! அவைப் பொறுப்பு வகிக்கும் அமைச்சருக்கு எழுதப்படும் கடிதங்களுக்கு நேர்முகப் பட்டுவாடா அல்லது இலவச அஞ்சல் வசதிகள்—இலவச கடிதத் தாள்கள்! அவையில் கலந்துகொள்ளச் செல்வதற்கு ஆகும் டாக்சி மற்றும் போக்குவரத்துக் கட்டணங்கள்! இலவச மருத்துவ வசதி!

# ஆட்சி மொழித் திருத்த மசோதாவில் 'கலப்படம்'?

## இந்தி வெறியர்களுக்குச் சலுகை!

### உணர்வுப் பிரச்சினையில் சொற்சிலம்பம் ஆடுகின்றனர்!

மொழி மசோதா பற்றிய காங்கிரசுச் செயற்குழுவின் விவாதம், எதிர்பார்த்தபடி புதன்கிழமையன்று முடிவடையவில்லை என்பதால், இன்றும் (வியாழன்) தொடர்ந்திருக்கிறது!

சில நாட்களாக வட மாநிலங்களில் நடத்தப்படும் இந்தி வெறி ஆர்ப்பாட்டம்—ஆங்கில ஒழிப்புப் போராட்டம்—ஆகியனவற்றுக்கு அஞ்சும் வகையில், நாடாளுமன்றக் காங்கிரசுக் கட்சி, 'மொழி மசோதாவில் சில பல திருத்தங்களைச் செய்யலாம்' என உத்தேசித்திருப்பதாகத் தெரிகிறது.

மொழி மசோதாவில் மேற்கொள்ளப்படும் இத்திருத்தம், உறுதிமொழிகளை மாசுபடுத்துவதாக இருப்பதோடு—ஓரளவுக்கு மனநிறைவு பெற்றிருக்கும் இந்தி பேசாதோரின் உணர்வுகளை மேலும் புறக்கணிப்பதோடு—இந்தி வெறியர்களின் விருப்பத்துக்கும் ஏற்ற வகையில் இருக்குமெனத் தெரிகிறது.

**" இந்தியில் வரும் கடிதங்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துக்கொள்ளும் வசதிகளை இந்தி பேசாத மாநிலங்கள் வைத்துக்கொள்ள வேண்டும் "**

என்பது, ஏற்படுத்தப்படவிருக்கும் ஒரு திருத்தமாகும்.

**மசோதாவில், இந்தி மொழிபெயர்ப்பு அலுவல்கள், 'கடிதங்களை அனுப்பும் முன்னையில் இருக்கவேண்டும்' என வழிவகை செய்யப்பட்டிருக்கிறது!**

அடுத்த திருத்தம், மசோதாவில் உள்ள சொற்களைப் பற்றியதாக இருக்கிறது.

**மத்திய அரசில் அலுவல் பார்க்க விரும்புபவர்களுக்கு 'இந்தி மொழி அறிவு' தேவையில்லை—என்று இருக்கிறது; இது, இந்தி வெறியர்களுக்குத் திருப்தியளிப்பதாக இல்லை!**

**'இந்தி அறிவு' தேவையில்லை என்பது 'ஆங்கில மொழி அறிவு' தேவை என்ற வகையில் பொருள்படுமே—எனப் பதைபதைக்கின்றனர்!**

**'ஆங்கில மொழி அறிவு தேவை இல்லை' என்று திருத்தப்படட்டும்; அல்லது 'ஆங்கில மொழி அறிவு' தேவையென்றால், 'இந்தி மொழி அறிவு'ம் தேவை என்ற திருத்தம் சேர்க்கப்படட்டும்—என்று இந்தி மொழிக்காரர்கள் விரும்புகின்றனர்!**

'கட்சிக் கட்டுப்பாட்டையும் மீறுவோம்' என எச்சரிக்கும் காங்கிரசு உறுப்பினர்களையும், 'ஆங்கிலத்தை அறவே ஒழிக்கவேண்டும்' என்று வன்முறை நிகழ்ச்சிகளில் ஈடுபட்டு வரும் இந்தி மாநிலத்தவர்களையும் திருப்திபடுத்தும் வகையில், புதுடில்லி, மேற்கண்ட முறையில் மொழி மசோதாவை மாற்றியமைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# அமிர்தசரசின் போர்க் கால அழிவு!

**1965-ம் ஆண்டில் நடைபெற்ற இந்தியா—பாகிஸ்தான் போரின் விளைவாக, பஞ்சாப் மாநில அமிர்தசரசு, ரூ. 305.55 இலட்சம் பெறுமான சேதங்களைப் பெற்றது!**

**பயிர்ச் சேதங்களும் இத்தொகையில் அடங்கியதாகும்!**

பஞ்சாப் சட்டமன்றத்தில், கேள்வி நேரத்தின்போது மறுவாழ்வு நிவாரண அமைச்சர் இத் தகவலைத் தந்திருக்கிறார்.

## நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

★

### 9--12--67

**திருவில்லிபுத்தூர்**

6-வது வட்ட தி. மு. க. சார்பில் இரவு 7-மணிக்கு திரு வண்ணாமலை சாலையில்; தலைவர்: சி. மலைக்கனி; பேசுவோர்: கா. இராசாமுகம்மது பி.ஏ.பி.எல்., இராமசுப்பிரமணியம்பி.ஏ.பி.எல். மா. குருசாமி, ச. அமுதன் பி.ஏ., ஆர். கே. துரைநாரணன், எஸ். டி. கொழுந்து.

# சட்டமன்றக் காங்கிரசு உறுப்பினர் மறைவு

தென்காசித் தொகுதிச் சட்டமன்ற காங்கிரசு உறுப்பினரான ஐ. ஏ. சிதம்பரம் (பிள்ளை) தமது சொந்த ஊரான இலஞ்சியில் இயற்கையெய்தினர். அவருக்கு வயது 58.

இவர் மறைவுச் செய்தி கேட்ட இவருடைய சிறிய தகப்பனும் அதிர்ச்சியுற்று மரணமடைந்ததாகச் செய்தி கிடைத்துள்ளது.

இவ்விருவரையும் பிரிந்து துயரத்தில் ஆழ்ந்துள்ள குடும்பத்தாருக்கு நமது ஆழ்ந்த பரிவும் ஆறுதலும் உரித்தாகுக.

—ஆசிரியர்

பாலர் அரங்கம்

டிச. 8, 9, 10-ந் தேதிகளில்
மாலை 4-மணிக்கு

**'அமேசானில் டார்ஜான்'**

(எம்.ஜி.எம். படம்)

கட்டணம் வழக்கம்போல்

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24- சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13 அச்சிட்டு வெளியிடப்பெற்றது.)